புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

=================================================================

# கண்மணி குணசேகரன் புதினங்களில் நடு நாட்டு வேளாண்மை

=================================================================

**பொ.பிரகாஷ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,
ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்யாலய கலை அறிவியல் கல்லூரி,
கோயம்புத்தூர் – 641020

=================================================================

## முன்னுரை

தமிழ்ச் சமுதாயத்தின் தொன்மையினையும் பழம் சிறப்பினையும் சிறப்பித்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்ல உதவியாக இருப்பது இலக்கியங்களே. வாழ்க்கையின் அடிப்படைத் தேவைகள் உணவும், உடையுமே. உணவினை உலகிற்கு அளிப்பது வேளாண்தொழிலே. அவரவர் வாழ்கின்ற நிலத்திற்கு ஏற்ப வேளாண் பொருட்கள் மாறுபட்டிருக்கின்றன. மனித வாழ்வின் இன்பத்தைத் துறந்தவர்களும் உணவினைத் திறக்கவில்லை, துறக்கவும் முடியாது. மனிதனுக்கு உணவு மிகவும் முக்கியமான ஒன்று பசித்த வயிறியோருக்கு உணவு அளித்த மனிதனை, **பசிப்பிணி மருத்துவர்** எனப்போற்றுகின்றனர் தமிழர்கள். இதன் மூலம் பசி போக்குபவன் மருத்துவன் என்பதை இவ்வுலகிற்கு உணர்த்தியவர்கள் தமிழர்கள். உணவின் மகத்துவம் அறிந்துதான் இலக்கியங்களின் வழியாக வேளாண்மை தொழிலைக் கொண்டு செல்ல முறப்பட்டனர் அதற்கான முனைப்பில் கண்மணி குணசேகரன் தன்னுடைய புதினங்கள் வழியாக நடுநாட்டு வேளாண்மை தொழில் முறைகளை இச்சமுதாயத்திற்கு எடுத்துரைக்கிறார்.

மனித முன்னேற்றத்தினாலும் தொழில் புரட்சியாலும் ஏர் பிடித்து விவசாயம் செய்தவர்கள் எல்லாம் இன்று நிலம்பிரித்து விற்பனை செய்வதில் ஆர்வத்தினைக் காட்டுகின்றனர். இதனால் கொஞ்சம் நஞ்சம் இருந்த விவசாய தொழிலும் அழியும் தருவாயிற்குத் தள்ளப்பட்டு இருப்பதையும், மீதமுள்ளவற்றை அரசாங்கம் கையகப்படுத்தித் தங்களுடைய வாழ்வாதாரத்தை அழிப்பதையும்

*இவருடைய புதிதங்கள் வெளிக்காட்டுகின்றன. இதனடிப்படையில் கண்மணி குணசேகரனும் நடுநாட்டு வேளாண்மையும் குறித்து எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**நடுநாட்டு வேளாண்மை**

*மனிதன் தோன்றித் தன்னையும், தன் இனத்தையும் நிலைநிறுத்திக் கொள்ள உணவு தேடுதலின் பொருட்டு வேட்டையாடினான். கிடைத்த உணவை உண்ட மனிதன் தனது இனத்தாருக்கும் உண்ணக் கொடுத்தன் மேலும் மீதமானவற்றைப் பாதுகாத்துப் பயன்படுத்தினான். அப்பொழுது அவன் தான் வசித்து வந்த இடங்களைச் சுற்றியுள்ள மரம், செடி, கொடிகளில் கிடைத்த காய்கனிகள், கிழங்குகள் விதைகள் போன்றவற்றைச் சேகரித்து உண்டு வாழ்ந்து வந்ததான். பின் தனக்குப் பயன்படும் இனம் கண்டு பழகி இனவிருத்தி செய்து கால்நடை மேய்யித்திரியும் நாடோடி வாழ்க்கை முறையை அமைத்துக் கொண்டான். ஆற்றங்கரையோரங்களிலும் மேட்டுப் பாங்கான இடங்களிலும் தன் குடியிருப்புகளைப் அமைத்து அதற்கு அருகிலேயே பயிர்களைப் பயிரிடக் கற்றுக் கொண்டான். பின் அதையோற்றியே வேளாண்மையைச் சிறக்க செய்தான். அவ்வகையில் நடுநாட்டு பகுதிகளான கள்ளக்குறிச்சி, பண்ருட்டி, விருத்தச்சலம், விழுப்புரம், நெய்வேலி, போன்ற பகுதிகளில் வேளாண்மை தொழில் என்றால் முந்திரி காய்களும் மல்லாட்டை எனப்படும் மணிலாக் கொட்டைகளுந்தான் விவசாயத்தின் ஆதாரமாகும். காலமாற்றத்தினால் நெல், கரும்பு, மஞ்சள், பயிறு போன்றவற்றை பயிரிட்டு வருகின்றனர். இவ்வாறாக நடுநாட்டு வேளாண்மை தொழில் திகழ்கின்றது.*

**வேளாண்மை - சொல் விளக்கம்**

*வேளாண்மை என்னும் சொல் மிகவும் தொன்மை வாய்ந்த பழந்தமிழ்ச்சொல். இதனைத் தொல்காப்பியர் தனது நூற்பாக்களில்,*

***"வேளாண் எதிரும் விரும்பின் கண்ணும்"*** ***(தொல்-பொருள் :நூ -1143)***

***"வேளாண் பெருநெறி வேண்டிய இடத்திலும்"(தொல்-பொருள் :நூ -1187)***

***"வேளாண் மாந்தர்க்கு உழுதூண்***
***அல்லது***
***இல்லென மொழிப பிற வகை நிகழ்ச்சி "*** ***(தொல் மர -1581)***

*என்னும் வேளாளருக்கு உழுதுண்டே சிறந்த தொழில் என்று குறிப்பிட்டுள்ளார். வேளாண்மை எண்ணும் சொல் உழவு என்ற பொருளோடு மெய் என்ற பொருளையும் குறிப்பதுடன் கொடை ஈகை என்ற பொருளிலும் வழங்கி இருந்தமை தெரிய வருகின்றது இதணை*

***"மெய்யும் கொடையும் வேளாண்மையாகும்"*** ***(பிங்கலம் -4114)***

***"வேளாண்மை உபகாரம் ஈகையும் செய்யும் "*** ***( திவாகரம் -11)***

*மேற்கண்ட அடிகளின் மூலம் பிங்கலம், திவாகரம் நிகண்டுகள் குறிப்பிடுவதை அறியமுடிகிறது. நிலத்தை நல்ல வகையில் சீர்படுத்தி மற்றவர்களுக்கு வேண்டிய உணவு முதலானவற்றை கொடுக்கும் வகையில் நல்ல பயிர் விளையும் வரையில் நிலத்தைப் பண்படுத்துதுவது அக்ரிகல்சர் ஆகின்றது என்று வேளாண்மைக்கான பொருள் விளக்கம் அளிக்கப்படுகின்றது.*

***முந்திரி வேளாண்மை***

*நடுநாட்டு வேளாண்மையில் மிகப் பிரதானம் பெற்ற தொழில் முந்திரி வளர்ப்பு ஆகும். இதனை*

> ***"ஆட்டுல மாட்டில ஒவ்வொண்ணுக்கும் விரிகொம்பு, கூடு கொம்பு, மயிலு நாரங்கற மாதிரி முந்திரியில் ஒவ்வொரு மரத்துக்கும் ஒரு பேரு. மஞ்சளா காய்கறது மஞ்ச நாறி.கொட்ட கோணலா இருக்கறது கோண முந்திரி. கொடி கொடியா கௌ நீண்டு இருக்கிறது கொடி முந்திரி. அப்புறம் இந்தக் குடி முந்திரிங்கிறது ஊடு மாதிரி படர்ந்த மரத்துல உள்ள நெல்லா பெருக்கி எடுத்துக்கிட்டுப் போற கஞ்சி, தண்ணிய வைக்கிறது. பொறுக்கியாந்து கொட்ற கொட்டைய திருவிக் கொட்டி வைக்கிறது. குடியிருக்கிற ஊடு மாதிரி அந்த மரம் இருக்கிறதால குடிமுந்திரின்னு பேரு.தே பாரன் இந்த முந்திரிய இதான் குடிமுந்திரிங்கறது". (அஞ்சலை-ப:79 )***

*என்ற கூற்றின் வழியாக வயலும்,வயல் சார்ந்த வாழ்க்கை முறையில். வாழ்ந்த அஞ்சலை வாக்கப்பட்டு செல்லும் மனக்கொல்லையான மண்ணாங்கட்டியின் ஊரில். வள்ளியின் மூலமாக முந்திரி வகையினையும், முந்திரி சார்ந்த வேளாண் தொழிலையும் அறிந்துகொள்வதை அஞ்சலை புதினம் கொண்டு அறியலாம்.*

> ***முந்திரி மரங்களின் கீழ். வெட்டவெளியில் இருக்கிற செடி செட்டுகளை அடியோடு, வேர்காண வெட்டி எறிகிற வேலை. (கோரை -ப:71)***

> ***உச்சி வெயில்லையாகிவிட்டது எல்லோருக்கும் தளர்ந்த நேரம் முந்திரி கிளையில் மாட்டியிருக்கிற கூழ் டீம் பேசிகள். காலியாகிவிட்டாலே தளர்வு ஆயாசமும் வந்துவிடம் (கோரை -ப:72)***

*மேலும் பெண் உழைப்பிலும், சிக்கனத்திலும், சேமிப்பிலும் சிறப்புடையவள் என்பதை பூர்ணியின் பாத்திரப்படைப்பு நமக்கு புலப்படுத்துகிறது.*

> ***"தோட்டத்துல காகாணி தரயும், அதுல நாலு முந்திரியும்ந்தான் இருக்கு. ரெண்டு பெண்ணுல இது மொத பொண்ணு. ஓய்ஞ்சு ஒரு நிமிஷங்கூட கீழ குந்தாது. முந்திரிக்கொட்ட நாளையில் முந்திரிக்கொட்ட கள வெட்ற நாளையில களவெட்டு. அதுகிட்ட இருக்கிற கைவெரலு பத்தும் சொத்துபத்துதான். நீ வேணுமின்னா பாரு. ஒன்ன குந்த வைச்சே சோறு போடும். அது சம்பாரிச்சு முந்திரிக்கொட்டை பொறுக்கி, தப்புக்கொட்ட சருவு அடிச்சு மூணு பவுனு நக அது கல்யாணத்துக்கு எடுத்து வைச்சிருக்குன்னா பாரன்" (கோரை -ப:74)***

*என்கிற வரிகளில் வழியாக பெண்ணின் தன்னம்பிக்கையும் உழைப்பையும் முந்திரியின் சிறப்பினைம் எடுத்துரைக்கிறார்.*

**உழவுத் தொழில்**

*நிலமும் நீரும் இருந்தால் மட்டும் போதாது நன்றாக உழவும் செய்யவும் வேண்டும் "ஏழுழவு உழுதால் எருபோட வேண்டாம்" என்பது முதுமொழி அதேசமயம் உழாமல் எருப் போட்டால் அதனால் பயிர் ஒன்றும் விளையாது என்பதை இவ்வடி உணர்த்துகின்ற உழவுத் தொழில் பற்றி*

***"என்னதான் களை வெட்டினாலும் எந்தக் காலத்திலும் எளிதில் அற வைக்கமுடியாது. ஆனால் வழிநடைக் கொல்லையின் முட்களை, எருக்கை ஏறியால் கொத்தி எடுத்துவிட்டு ஒரு ஏரோட்டினால் பட்டென்று நிலம் பதத்திற்கு வந்துவிடும்". (வந்தாரங்குடி -ப:16)***

*என்கிற கருத்தாக்கத்தை ராசோக்கியம் வழியாக நிலைநிறுத்துகிறார். மேலும்*

***"எத்தனை முறை ஓட்டினாலும் அறா உழவாகத்தான் தெரியுமாம்".***

***(வந்தாரங்குடி -ப:15)***

*எனக் கண்மணி குணசேகரன் குறிப்பிடுவதைக் காணலாம்*

*பெரும் பெரும் கட்டிகளாக உள்ள வயல் மண்களை சிறுசிறு கட்டிகளாக்கும் வரை உழ வேண்டும் அவ்வாறு உழுதால்தான் மண்ணை பதப்படுத்த முடியும் என்பதை*

***"கெழக்கால ஒழுங்கிய பக்கம் லேசா செங்கட்டு சேந்த மாதிரி மோபரியா இருக்கிறத நாளைக்கி ஓட்டுனாதான் பதமா இருக்கும் . எங்க ஏரக் கூட பின்னம் ஒரு ஏரு பாத்திங்கன்னா, ஒரு சாலு ஓட்டி, மறுசாலுக்கு அப்படியே நாலு எள்ளக் கெடாசிகிட்டுப் போனா நாள மறாநாளுக்கு மேற்காலப் பக்கம்கிட்டப் போவும்போது மணல்தர பதத்துக்கு வந்துடும்" (வந்தாரங்குடி -ப:531)***

*என்ற வரிகள் கொண்டு பறைசாற்றுகிறார். உழுகின்ற போது கீழ்மண் மேலும் மேல் மண் கீழுமாக சென்று நன்றாக கலக்கிறது.பின்னர் காற்றாட உணக்கல் - காயவிடுதல்- ஆறப்போடுதல் போன்ற செயல்களுக்கு பின்னரே விதைக்க வேண்டும். என்பது வெளிப்படுகிறது இக் கூற்றினைப் மெய்ப்பிக்கும் வகையில்*

***"அகல உழுவதைக் காட்டிலும் ஆழ உழுவதே சிறந்தது"***

*என்பது பண்டைய உழவர்களின் கருத்தாக்கத்துடன் ஒத்துச் செல்வதை காணலாம்*

***நாற்று நடுதல்***

*வேளாண்மையில் நடவு தொழில் என்பது மிக முக்கியமான நிகழ்வாகும். நிலத்திளுள்ள மண்ணை பதப்படுத்தி உழவு செய்த பின்பு நாற்றங்காலில் மாடுகளைக் கொண்டு சேடை அடித்து நாற்று பிரித்து நல்ல நேரம் பார்த்து ஈசானி மூலையில்*

*கைராசியான பெண்ணை கொண்டு நடவினை தொடங்குவார்கள்.என்கிற கருத்தையை நிலை நிறுத்தும் வகையில் அஞ்சலையின் வாழியே உணர்த்துகிறார்.*

***"நாற்றங்கால் சேடை அடித்துப் போட்டிருக்கவில்லை"***
***"மாட்டை வா பேச்சி ரெண்டு மெனைக்கு ஒட்டிக் கொடுத்தான்"***

***"பத்திருபது நாட்களாகச் சேடை அடித்து ஓய்ந்த மாடுகள் நடக்கவில்லை மூலை நடவானதால் சனம் அதது அது வாட்டத்திற்கு வந்ததில் உழவை ஓட்டிக் கொடுக்க முடியவில்லை அடித்து ஓட்டினான்" (அஞ்சலை -ப:18)***

***நாற்றங்கால் நம்பிக்கை***

*சமய இலக்கியங்களில் குறிப்பிடும் பள்ளன், பள்ளிக்கும் முள்ளுச்செடிக்கும் முக்தி கிடைத்ததை போல நாற்றங்கால் நடவு செய்வதற்கு துணையாக நின்ற உழவு மாடுகளுக்கு இறைவன் பொங்கல் நாளன்று முத்தி கொடுப்பான் என்கிற நம்பிக்கை நடுநாட்டு மக்களிடையே காணப்படுவதை எடுத்துரைக்கிறார்.*

***"பொங்கல் நாளில் மாட்டுக்கிடையின் போது சாமி வந்து உழவு மாடுகளை விசாரிக்குமாம் எந்த மாடு நாற்றங்கால் ஓட்டியிருக்கிறதோ அந்த மாட்டுக்கு சாமி மோட்சம் கொடுக்குமாம்" (அஞ்சலை- ப:19)***

*இவையின்றி உழவு செய்கின்ற போது உழவன் வேளாண் பொருட்களான கலப்பை, மண்வெட்டி, உழவுக்கழி போன்றவற்றை விளைநிலத்தில் விட்டுவிட்டு செல்லுதல் கூடாது. அவ்வாறு செல்லும் உழவர்களுக்கு தண்டனையுண்டு. அப்பொருளை யார் எடுத்து வைத்திருக்கிறார்களோ அவர்களுக்கு பணமாகவோ அல்லது அவர்கள் விரும்பும் பொருளாகவோ கொடுக்க வேண்டும்.*

***"நடவு மெனையில் அது மாதிரி உழவுக் கழியையோ, மண்வெட்டியையோ, கலப்பையையோ, மறந்து வைத்து விட்டால் இதுதான் தண்டனை"***

***"நெல்பயிரை ஊனி வைத்தவர்களுக்கு பணமோ, பொருளோ அவர்கள் விரும்புகிற எதுவோ கொடுத்து, அவர்கள் சம்மதப்பட்டு எடுத்துக் கொடுத்தால்தான் உண்டு" (அஞ்சலை- ப:19)***

*என்கிற கருத்தை சின்னாண்டையின் மகன் வழியாக எடுத்துரைக்கிறார்.*

*மழை பெய்த பிறகு ஈரமான நிலத்தில் ஏர்கொண்டு உழுது மண்ணைப் பதப்படுத்திய பின் விதை விதைத்தனர். "உழவில் புழுதி உண்டாக்கப்பட்டால் அப்பொழுது இக்கதிர்களின் தாக்கத்தால் வேண்டாத நுண்ணுயிர்கள் அழியும். இது பயிர் முளை விடப் பாதுகாப்பாகும். பின் நீர்ப்பசை நீங்கி சூரிய ஒளியால் பாங்கு பெறுவதுடன் ஊட்டங்களும் பெறுவதால் எரு தரும் உரத்தை மண் பெறுகிறது. செம்மையான வயலைப் புழுதி உண்டாக்கும் வரை உழுதால் எரு இல்லாமால் கூட நல்ல விளைச்சல் உண்டாக்கும் என்பதை*

***"ஒனக்குத் தெரியாம கட்டுத் தெருவுல எத்தினிமாடு நா கட்டி வைச்சிருந்தன், குழி எருவு போடறதுக்கு.". (கோரை-ப:30)***

***"குடிமிக்கட்டிய படப்பையொடு மிளிர***
***அரிகால் போழ்ந்த தெரி பகட்டு உழவர்" (அகம் 41: 5-6)***

***"விதையர் கொன்ற முதையல் புழி (நற் 122:1)*** *என்ற அடிகள் புலப்படுத்துகின்றன.*

*போன்ற வரிகளின் மூலமாக நடுநாட்டு உழவுமுறையினை எடுத்துரைக்கிறார்*

***நடுநாட்டு விதைப்பு முறைகள்***

*உழவர்கள் வேளாண்மைக்குத் தேவைப்படும் பொருட்களைத் தங்கள் உயிரைப் போன்று எண்ணுவர், நல்ல விளைச்சலுக்குத் தரமான விதை தேவை என்பதை உணர்ந்திருந்தனர். அதனால் முதலில் விளைவிக்கும் கதிர்களை விதைக்கெனத் தேர்ந்து எடுத்து வைத்திருப்பர். வைத்திருக்கும் தானிய மணிகளை ஒருபோதும் உணவுக்குப் பயன்படுத்தியதில்லை. யாரேனும் பயன்படுத்தினால் அவர்தம் குடி அழிந்து போகும் என்ற நம்பிக்கை மக்களிடத்தில் பொதுவாக நிலவி வருவதை அறிய முடிகிறது இதனை,*

***"வாழ்தலின் வரூஉம் வயல் வளன் அறியான்***
***வீழ் குடி உழவன் வித்து உண்டா அங்கு" ( புறம் :230 :12 -13)***

*என்ற அடிகள் விளக்குகின்றன. முக்கூடற் பள்ளில் ஏராளமான நெல்லின் பெயர்கள் காணப்படுகின்றன. அவை முத்துச்சம்பா, பூஞ்சாலி, பூம்பாளை, மச்சுமுறித்தான், சீரகச்சம்பா, வாலான், செஞ்சம்பா, மூங்கிற்சம்பா, வாணன் நெல், செந்தாழை, மூவான், முண்டன் என்பன அவற்றுள் சில.*

*மண்ணில் விதைக்கப்படும் நெல்லானது நன்றாக விளைந்தால்தான் மக்களிடத்தில் பஞ்சம் பட்டினி என்பது இருக்காது. என்பதை அஞ்சலையின் புதினம் வழியாக புலப்படுத்துகிறார்*

***"நெல்லா வெளையணும், சோறு நெறையணும், சனங்களும் இறங்கி, பயிரை எடுத்துக்கொண்டு நின்றார்கள். அஞ்சலை முதல் பயிரை எடுத்து ஊனியதும், மழை இறங்குகிற மாதிரி சேற்றில் பயிரை இறக்கினார்கள். மூலை நடவு. சனி மூலையில் குனிந்து நட்டுக்கொண்டே பிரிந்து சென்று கடைசியில் புள்ளையார் மூலையில் போய் முடியும்." (அஞ்சலை -ப:18)***

***"பறப்புக்காரி அஞ்சலய மொதல்ல கைய வைக்க சொல்லு, மென நெல்லா மாளும்.....". (அஞ்சலை -ப:19)***

***"ராசோக்கியம் விதைப்புத் திட்டத்தை சொல்லிக்கொண்டு போனார்...... மழை பெய்த பிறகு கொல்லையைப் போய்ப் பார்க்காமலேயே மண்ணின் தன்மைகளைச் சொல்லும் அவரை வியப்பாகப் பார்த்தார் கலியபெருமாள்." (வந்தாரங்குடி-ப: 531)***

*மேலும் இக்கருத்திற்கு வலுசேர்க்கும் வகையில். நெற்பயிர்களை மட்டுமின்றி மிளகாய் நாற்றினையும் நடுநாட்டு மக்கள் பாதுகாத்து வைப்பதை.*

*கோரை புதனத்தில் மிளகாய் நாற்றைத் தேடி அழைகின்ற உத்தண்டியின் வாழ்க்கையைக் கொண்டு அறியலாம்.*

> ***"மொத மொத மொளகா வைக்க வெர மொளா இருக்கான்னு கேக்க வந்தா............"*** ***(கோரை- ப:23)***

> ***"வெர மொளா இருக்குமாங்க ..........."***
> ***"எத்தினி கிலோ வேணும் ....."***
> ***"ரெண்டு கிலோ போதுங்க....."***
> ***"கிலோ நாப்பது ரூவாதான்...."***
> ***"மொதல்ல மொளகாயக் காட்டுங்க......."***

***"இங்க பூரா வெரைக்கி உடறததான் வைச்சிருப்பாங்க. மொளாயப் பார்க்கவே வேணாம். பவுனு மாதிரி இருக்கும். தோட்டம் பூரா பாரு. நாத்து உட்ருக்கறது எல்லாம் இந்த மொளாதான். விருத்தாச்சலம் சந்தையில் விக்கிற மொளாக்கனு பூரா, இந்த ஊரு மொளாக்கன்னுதான்...... உள்ளே திரும்பிக் கூப்பிட்டார் எம்மா அந்த பைசாக்குல வெரைக்கி எடுத்தது போவ மீதி மொளா இருக்கும்பாரு எடுத்தா....."***

***(கோரை- பக்:24,25)***

*தலைமுறை தழைக்கா ஆண்,பெண் உறவு வேண்டும். சமுதாயம் தழைத்து வளர மண்ணுக்கு விதை வேண்டும். என்கிற கருத்துக்களை அடிப்படையாக கொண்ட கண்மணி குணசேகரன் வேளாண்மை தொழிலை நிலைநிறுத்துகிறார்.*

***எருவிடல்:***

*நிலத்திற்கு வளம் சேர்ப்பவை உரமாகும் சங்ககால மக்கள் இயற்கை உரங்களைப் பயன்படுத்தினர். முற்காலத்தில் சாணம், இலை, தலை ஆகியவை இயற்கையாகக் கிடைப்பவை இவைதவிர ஆட்டுக்கிடையின் வழியாக கிடைக்கும் தொழுவக் கழிவும் இயற்கை உரங்களாக பயன்படுத்தப்பட்டன. "தொறுத்தல்" என்பது கிடை அமர்த்துவதைக் குறிக்கும். கிடை அமர்ந்தால் என்பது விவசாயம் செய்யும் முன்பு நிலத்திற்கு வளம் சேர்ப்பதாகும், விவசாயம் செய்யும் வயலில் ஆடுகளைக் கொண்டு சென்று ஒரு நாள் இரவு முழுவதும் இருக்கச் செய்வர். அவை வயலில் இடும் சாணங்கள் உரமாகும். இதனைக் 'கிடை அமர்த்தல்'என்று கூறுவர். இதனை,*

> ***"தொருத்த வயல் ஆரல் பிறழ்நவும் ஏறு பொருத செறு உழாது வித்துநவும்"*** ***(பதிற்று:13:1-2)***

*பதிற்றுப்பத்து குறிப்பிடுவதை காணலாம். இதன் மூலம் இயற்கை உரங்களையே அக்கால வேளாண்மையில் தொழிலில் பயன்படுத்தினர் என்பதை அறியமுடிகிறது. இதனைப் புதினத்தில் பின்வருமாறு குறிப்பிடுவதை பார்க்க முடிகிறது.*

***"அரமூட்ட புண்ணாக்கு வாங்கியாந்து நொறுக்கி ஊறவைச்சித் தெளி. இதுக்கு மின்ன பயிருவைச்ச அந்தப் படுபோசி எந்த எருவப் போட்டான். வெறுங்கொல்லியில கலப்பு ஒரத்தப் போட்டு பயிருவைச்சி வெள்ளா வைச்சத் துணியாட்டம் வெளுத்துப் போச்சி மண்ணு"*** *(கோரை-ப:30)*

*என்றும்*

***"குழி எருவு இருந்து ஒரு குத்துப் போட்டு, கன்ன வைச்சா பட்டுன்னு பச்ச கட்டும்" குழிகளில் கால்பட்டு இடியாமல், உரம் போட்டபடி செல்வராசு சொன்னான்".***

*(கோரை-ப:28)*

*என்றும் கண்மணி குணசேகரன் புதினம் வழி அறியமுடிகிறது. வேளாண்மை தொழிலுக்காக நடுநாட்டு நிலப்பகுதிகளில் பன்றி சாணம் பயன்படுத்துவதைப் புதின ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.*

***"பிஞ்சு நெல்லா புடிக்குமின்னு சொன்னாங்கன்னு பன்னி சாணி போட்டன்................."***
***"பன்னி சாணிதான் வெரமொதலு............."*** *(கோரை-ப:9)*

*அதுபோல அவரவர் நிலப் பகுதிக்கு ஏற்ப எரு வகைகள் மாறுபடும். என்பதை*

***"காய்ந்த சரக்காக் கிடந்தாலும் நாற்றமான நாற்றம். நான்கு மூட்டைகள். வண்டிக்கு அலைந்து பார்த்துவிட்டு நான்கு நடையாய் தலையாலயே தூக்கி வந்துவிட்டான். வழிநெடுக்க. "என்னா இது" என்ற கேள்விக்கு பதில் சொல்லி மாளவில்லை. "பன்னி சாணி" என்றதும் மூக்கை சுளித்து, காறித்துப்பியவர்கள் ஏகப்பட்ட பேர்."***

*மேலும் விலை மலிவாகக் கிடைக்கிறது என்பதற்காக செயற்கை உரங்களை வாங்கி மண்ணை மலடாக்குவதை விட, தங்கத்திற்கு நிகராக இருந்தாலும். மண்ணுக்கு வளம் சேர்க்கும் இயற்கை உரங்களையே பயன்படுத்த வேண்டும். என்கிற கருத்தை கோரை புதினம் மூலம் வெளிப்படுவதை பார்க்க முடிகிறது.*

***"இந்த சாணியப் போயி சங்கு பவுனு வெல சொல்கிறான்." டிஏபியா......போடுங்களன்.போட்ட நாலு நாளைக்கு வயசிக்கு வந்த பொம்மினேட்டி மாதிரி பல்ல இளிச்சுக்கிட்டு போவும்"***

*என்று வரிகளின் மூலம் செயற்கை உரம் மண்ணிற்கும், பயிருக்கும் கேடு என்பதை குறிப்பிடுகிறார்.*

***நீர்ப்பாய்ச்சுதல்***

*நீர்வளம் மிகுந்திருத்தலும் அதனைச் சிக்கனமான முறையில் பயன்படுத்துவதே வேளாண்மை செய்வோருக்கு அழகாகும். தேவையறிந்து முறையாக "பாசனம்" செய்ய வேண்டும். பயிரை உயிர் போல் பாதுகாக்க வேண்டும் என்பதையே கொள்கையாக பின் பற்றினார்கள். மக்கள் கிணறு, குளம் போன்ற நீர்*

*நிலைகளை வெட்டி நீரைப் பயன்படுத்தினர் 'இடா' என்னும் கூடையால் நீரை முகந்து இறைத்து நீர் பாய்ச்சினர்கள். இதனை,*

***"தோடு வழங்கும் அகல் ஆம்பியின் கயன் அகைய வயல் நிறைக்கும்***
***(மதுரை 91- 92)***

*என்ற அடிகள் உணர்த்துகின்றன . தண்ணீரை விவசாயத்திற்கு ப் பயன்படுத்த மதகுகள் பலவகை இருந்தன என்பதை ,*

***"பொய்கை வாயிற் புனல் பொருள் புதலின்" (பதிற்று -27)***

*பதிற்றுப்பத்து, பரிபாடல் போன்ற சங்க நூல்களின் குறிப்புக்கள் வழியாக காணமுடியும். அதேசமயம் வேளாண்மை செய்யும் வேளாளர் தனக்கு தண்ணீர்யில்லை என்றாலும் கூட பொறுத்துக் கொள்வார்கள் ஆனால் தன் பிள்ளைபோல் வளர்த்த பயிர்களுக்கும் மண்ணுக்கும் தண்ணீர்யில்லை என்றால் பொறுத்துக் கொள்ள மாட்டார்கள் எதிரியின் வீடாக இருந்தாலும் அவரிகளிடத்தில் யாசகம் வேண்டி நிற்பார்கள் என்பதை*

***"மேல வெளிக்கு சின்னசாமி அண்ணங் கெணத்துல தண்ணி இருக்குதான்னு பாக்கப் போனேன்..." (கோரை -151)***

***"கோரையா இருக்குன்னு தண்ணி உடமாட்டன்னுட்டாரு அதுதான. இப்படி இப்பிடின்னு விஷயத்தச் சொல்லிக் கேளு...." ((கோரை -151)***

***"அதான் இப்பத்திக்கு மழ பேயறமாதிரி தெரியில. கொல்லியிலியும் வாய்க்கா வாஞ்சிலாம் அப்படியேதான கெடக்குது. கொஞ்சம் மனச பெரிசி பண்ணி ஒரு தண்ணி உட்டா......தளரப் புடிச்சு ஒரு சால் ஒட்டிப் போடுட்டுடுவன். அதுக்கு மேல புழுதியில ஓட்றதுக்கு சால்சா இருக்கும்." தயங்கி தயங்கிச் சொன்னான்."***

***"எங்க தண்ணியிருக்கு? தண்ணி நெல்லா ஊறற மாதிரியிருந்தா நா எதுக்கு அந்த எள்ளுக் கட்டய சும்மாப் போட்டு வைச்சிருக்கறன் இந்நேரம் ஒட்டி புழுதி கௌப்பியிருக்கமாட்டேன் ........ பெருக்க மாட்டேனா கெணத்துல கெடக்கிற தண்ணி போதும் பாத்துட்டுதான் வந்தேன் கெடக்கிறது பாதி பாஞ்சிடும் மீதி இரண்டு ஊத்துல ஏறைச்சிடலாம்" (கோரை -152)***

*என்பதை கோரை புதினத்தில் வரும் உத்தண்டி, சின்னசாமி கதைமாந்தர்கள் வழியாக உணர்த்துகிறார்.பயிர் என்பது உயிர் போல என்கிற சித்தாந்தத்தை முன்வைத்து உள்ளார்கள் வேளாளர்கள். வானம் பார்த்த பூமியாக இருந்தாலும் காலம் தாழ்த்தி மலைகள் பெய்வதாலும் அந்தந்த பருவ காலகட்டத்தில் விளைவிக்கக் கூடிய பயிர்களுக்கு தண்ணீர் மிகுதியாகவோ அல்லது குறைவாகவோ கிடைப்பதனால் உணவு பற்றாக்குறை ஏற்படுகிறது. இதனால் விலைவாசி உயர்வும் நிகழ்கின்றன ஆனால் நீர் பாதுகாப்பு என்பது வேண்டும் ஆனால் நீர் பதுக்கள் என்பது இருக்கக் கூடாது என்பதை இவ்வாய்வின் மூலமாக முன்வைக்கலாம்*

**களைபறித்தல்**

*களைபறித்தல் என்பது பயிர் வளத்தைக் காக்கும் ஒன்று, களை என்பதற்கு நீக்குதல் என்றப் பொருளைத் தரும். "களை பிடுங்காப் பயிர் கால்பயிர்" என்பது பழமொழி தேவையற்ற செடிகளைக் களைந்து விட்டால் பயிர் செழிக்கும். பயிரின் நடுவே வேண்டாத செடிகள் இருந்தால் பயிருக்குத் தேவையான நீரையும், உரத்தையும் அச்செடியே பெற்றுக்கொள்ளும். பயிருக்கு முழுமையான நீரும் உரமும் கிடைப்பதில்லை. எனவே தான் களைபறித்தல் என்பது வேளாண்மையில் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகிறது. அதனை*

> ***"நடவும் முடிந்து களை பறிக்கிற வேலை நடந்து கொண்டிருந்தது. பாக்கியத்துக்கு அஞ்சலையைத் தனியாக வேலைக்கு அனுப்பப் பயமாயிருந்தது." (அஞ்சலை -ப:21)***

*என்கிற கருத்தாக்கத்தை அஞ்சலை புதினத்தின் வழியாக அறியலாம் மேலும்*

> ***"களை வெட்டுகிறபோது கூட நாற்றம் விடவில்லை. தளரப் பிடித்து ஆள் வைக்காமல் ரெண்டு பேருமாகவே வெட்டினார்கள். பதமான ஈரம். இனிமேல் வேலை முடிந்தது என்கிற மாதிரி ஒரு தெம்பு வந்தது". (கோரை-ப:34)***

> ***"தலைகாட்டிய பில்லுப்பொடிகள் முளையிலியே கிள்ளியெறிப் பட்டிருந்ததில் கொல்லை மாசு மருவில்லமல் இருந்தது" (கோரை-ப:35)***

*நாம் உடலில் இருக்கும் தேவையற்றதைக் ரோமங்களை களைவது போல பயிர்களுக்கு இடையே காணப்படும் களைப்பயிர்களை களைதால் சிறப்புடைய செயல் என்பதை சுட்டிக்காட்டுகிறார். களையினும் வேறுபட்டது காத்தல் -அஃதாவது பயிர் பாதுகாப்பு காத்தலில் இருவகை உண்டு 1. பூச்சி, புழுக்கள், பிற உயிர்கள் (பறவை, விலங்கு) ஆகியவற்றால் பயிருக்கு வரும் அழிவிலிருந்து காத்தல் 2.பூஞ்சாணம், நுண்ணுயிர்கள், நச்சு உயிர்கள் முதலியவற்றால் நோய்கள் வராமல் காத்தல் ஆகிய இவ்விருவகையிலும் பயிர்களைக் காத்தல் வேண்டும். ஏர் உழுது, எருவிட்டு விதைத்து, களையெடுத்து, நீர்ப்பாய்ச்சி, நெடுவயல் நிரைய நெல் மணிகள் தோன்றிய பின் பயிரைப் பாதுகாப்பு செய்யமால் விடுவது கொலைக்கு குற்றத்திற்கு ஒப்பாகும் அதனால் பயிரைப்பதுகாத்து வைப்பது மிகவும் முக்கியமான ஒன்று ஆகும். அதை நடுநாட்டு மக்கள் பின்பற்றி உள்ளனர் என்பதே உண்மை.*

**முடிவுரை**

*நிலங்களைக் ஐந்தாக பிரித்த தமிழர்கள். அந்தந்த நிலங்களுக்கான தொழிலையும் வகுத்துக் கொண்டனர்கள். அவர்களை வலி வலியொற்றி வந்த தமிழ்ச்சமூகம் தங்களது நிலப்பரப்புக்கு ஏற்ப தொழில் முறையினை அமைத்துக் கொண்டது. உழவுத் தொழில் என்று வருகிற போது மண்ணின் தன்மைக்கு தகுந்தார் போல பயிர் வகைகளைப் விதைத்து அறுவடை செய்தனர். அவ்வகையில் நடுநாட்டு வேளாண்மை தொழிலும் அமைகிறது. பொதுவாக காணப்படும் நெல், மிளகாய்,*

கரும்பு மற்றும் பயிறு வகைகள் தவிர தங்களின் மண்ணுக்கே உரிய முந்திரி மற்றும் பலாப்பழ வேளாண்மையில் தொடர்ந்து விளங்குவதை புதினம் கொண்டு அறியமுடிந்தது. மேலும் உழவு சார்ந்த சடங்கு முறைகள், நம்பிக்கைகள், பயிர்களுக்கு பயன்படுத்தும் எரு வகைகள் போன்ற வாழ்க்கை முறையில் நடுநாட்டு மக்கள் மாறுபட்டுத்தான் நிற்கிறார்கள் என்பதையே இவ்வாய்வின் முடிவாக முன்வைக்கப்படுகிறது.

## துணை நூற்பட்டியல்


### முதன்மை சான்றாதாரம்

1. கண்மணி குணசேகரன் -
   கோரை - 2002
   முதல்பதிப்பு
   தமிழினி பதிப்பகம்,342 டி.டி.கே.சாலை,
   இராயப்பேட்டை,
   சென்னை-600005

2. கண்மணி குணசேகரன்
   அஞ்சலை - 2012
   நான்காம் பதிப்பு
   தமிழினி பதிப்பகம்,
   342 டி.டி.கே.சாலை,
   இராயப்பேட்டை,
   சென்னை-600005

3. கண்மணி குணசேகரன்
   வந்தாரங்குடி - 2013
   முதல்பதிப்பு
   தமிழினி பதிப்பகம்,
   342 டி.டி.கே.சாலை,
   இராயப்பேட்டை,
   சென்னை-600005

### துணைமைச் சான்றாதாரங்கள்

1 . கவிஞர் வைரமுத்து
   2012
   மூன்றாம் உலகப்போர்,
   சூர்யா லிட்ரேச்சர் (பி) லிட்
   சென்னை -60002

2. சேதுராமன்
   2008
   திருக்குறள் மூலமும் உரையும்
   கவியரசன், பதிப்பகம்,
   சென்னை.

3. சங்க இலக்கிய நூல் தொகுப்பு
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
   சென்னை

4. பரிபாடல்
   நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
   சென்னை